9. விலையில்லா மிதிவண்டிகள் வழங்குதல்

அரசு/அரசு உதவி பெறும் மற்றும் அரசு உதவி பகுதியாகப் பெறும் (சுயநிதி அடிப்படை) மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறிஸ்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவ மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

2014-2015 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்திற்கென, பெண்கள் மிதிவண்டிகளுக்கு ரூ.3,364.77 இலட்சமும், ஆண்கள் மிதிவண்டிகளுக்கு ரூ.2,828.38 இலட்சமும், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2011–2012 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்ட மிதிவண்டிகள் விவரம்

வ. எண்	நிதியாண்டு	மாணாக்கர்களின் எண்ணிக்கை	வழங்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்)
1.	2011-2012	1,72,337	4,947.50
2.	2012-2013	1,69,763	5,276.18
3.	2013-2014	1,79,160	5,824.34
	மொத்தம்	5,21,260	1,6048.02

10. பத்தாம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ மாணவியரை நற்பெயர் பெற்ற தனியார் பள்ளிகளில் சேர்த்தல்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் அகில இந்திய அளவில் நடைபெறும் போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளவும், அவர்கள் திறமையை வளர்த்துக் கொள்ளவும் அரசு /அரசு நிதியுதவி பெறும்/மாநகராட்சி/நகராட்சி/ஆதி திராவிடர் நல மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயின்று 10ஆம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும்

மாணவ, மாணவியரில், ஒரு மாவட்டத்திற்கு 10 மாணவ, மாணவியர் வீதம் (3 மாணவிகள் உட்பட) மொத்தம் 320 மாணவ, மாணவியர் தேர்வு செய்யப்பட்டு நற்பெயர் பெற்ற தனியார் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் சேர்க்கப்படுகின்றனர். அரசு ஆண்டு தோறும் ஒரு மாணவர் (அல்லது) மாணவியருக்கு ரூ.28,000/- செலவிடுகிறது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெற, அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2014-2015 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்திற்காக ரூ.837.65 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2011–2012 ஆம் ஆண்டு முதல் நற்பெயர் பெற்ற தனியார் பள்ளிகளில் சேர்க்கப்பட்ட விவரம்

வ. எண்	நிதியாண்டு	மாணாக்கர்களின் எண்ணிக்கை	வழங்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்)
1.	2011-2012	274	153.44
2.	2012-2013	269	150.64
3.	2013-2014	278	127.78
	மொத்தம்	821	431.86

11. நற்பெயர் பெற்ற தனியார் உண்டி உறைவிடப் பள்ளிகளில் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறிஸ்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவ மாணவியரை 6 ஆம் வகுப்பில் சேர்த்தல்

ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறிஸ்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவ மாணவியருக்கு அவர்தம் ஆளுமைத் திறனை வளர்க்கும் நோக்கத்தோடு அரசு/அரசு நிதி உதவி பெறும் /மாநகராட்சி/நகராட்சி/ஆதி திராவிட நல மற்றும் அரசு

[2014 ஜூலை 22

பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 5 ஆம் வகுப்பு பயிலும் சிறந்த மாணவ மாணவியரைத் தேர்ந்தெடுத்து நற்பெயர் பெற்ற தனியார் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பில் சேர்த்து அவர்கள் தொடர்ந்து 12ஆம் வகுப்பு வரை பயில ஆகும் செலவினம் முழுவதையும் அரசே ஏற்கிறது. இத்திட்டத்தின் கீழ் வட்டார அளவில் தனித்தேர்வு ஒன்று நடத்தி, அதில் அதிக மதிப்பெண்கள் பெறும் ஒரு மாணவன் அல்லது ஒரு மாணவி தேர்ந்தெடுக்கப்பட்டு, தனியார் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பில் சேர்த்து பயில ஏற்பாடு செய்யப்படுகிறது.

2011–2012 ஆம் ஆண்டு முதல் நற்பெயர் பெற்ற தனியார் பள்ளிகளில் மாணாக்கர்கள் சேர்க்கப்பட்ட விவரம்

வ. எண்	நிதியாண்டு	மாணாக்கர்களின் எண்ணிக்கை	வழங்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்)
1.	2011-2012	1,428	529.92
2.	2012-2013	1,758	657.65
3.	2013-2014	1,986	895.71
	மொத்தம்	5,172	2,08,3.28

12. விடுதிகள்

கிராமப் பகுதிகளில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர் இடைநிற்றல் இன்றி பள்ளி, கல்லூரி, தொழிற்கல்வி படிப்பினைத் தொடர அவர்களை ஊக்கப்படுத்தும், வண்ணம் விடுதி வசதிகள் செய்து தரப்படுகின்றன.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கி வரும் விடுதிகளும் அவற்றில் ஒப்பளிக்கப்பட்டுள்ள மாணவ, மாணவியர் எண்ணிக்கையும் கீழ்வருமாறு:—